# சரீரமும், ஆவியும்




**“உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.“ (1 கொரி 6:19,20)**. மேற்கண்ட வசனங்களில், வேதம் தெளிவாக கூறுகிறது, இந்த மாம்ச சரீரம் தேவனாலே கொடுக்கப்பட்டது, அது தேவனுக்கு உடையது. இதற்கும் மேலாக, பரிசுத்த ஆவியானவர் தங்கி இருக்கிற ஆலயமாய் இருக்கிறது என்று.

**2 கொரி 4:6,7 கூறுகிறது “இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.“** என்று. ஆம் நம்முடைய சரீரம் மண்பாண்டம் போல் இருந்தாலும், அதுவே தேவ மகிமையை வெளிப்படுத்துகிற வாய்க்காலாகும். எனவே நாம் மரிக்கும் பொழுது, நமது சரீரம் நாறி, அழுகி போகக்

கூடியதாய் இருந்தாலும், நாம் மரிக்கும் வரையிலோ, அல்லது ஆண்டவருடைய வருகையில் மறுரூபமாகும் வரையிலோ, நம்முடைய சரீரத்தை பேணிப் பாதுகாத்து, ஆண்டவர் தங்கும் ஆலயமாய் பாதுகாத்துக் கொள்வது மிக முக்கியமாகும். எனவே நம்முடைய ஆவி ஆத்துமாவை தேவனுக்கு முன்பாக எப்படி ஜாக்கிரதையாய் காத்துக் கொள்கிறோமோ அதை போல் நம்முடைய சரீரத்தையும் ஜாக்கிரதையாய் காத்துக் கொள்வது அவசியமாகும்.

மேலும் அப்.பவுல் **ரோ 7:22,23 வசனங்களில் "உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன். ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது."** என்கிறார். மேலும் **ரோ 7:25 இல் "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக் கும் ஊழியஞ்செய்கிறேன்."** என்கிறார். மேற்கண்ட வசனங்களின்படி நாம் நம் சரீரம் சுகமாய் இருப்பதைப் பற்றி மட்டும் நினைத்து, ஆவிக்குரிய வாழ்வை பற்றி கவலையற்றிருப்போமானால் அது நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் ஆகிய மூன்றையும் அழித்துப் போடும். அதற்கு பதிலாக **"ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது." (2 கொரி 4:16)** என்பது நம்முடைய அனுபவமாய் இருக்க வேண்டும்.

மேலும் **2 கொரி 5:1-10 வசனங்களில் "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில், இந்தக் கூடாரத்திலே நாம் தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்; தரித்துக்கொண்டவர்களானால், நிர்வாணிகளாய்க் காணப்படமாட்டோம். இந்தக் கூடாரத்திலிருக்கிற**

நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம்; இந்தப் போர்வையைக் களைந்துபோடவேண்டுமென்று விரும்பாமல், மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுவதற்காகப் போர்வை தரித்தவர்களாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே; ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரே. நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம். நாம் தைரியமாகவே யிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்.அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம். ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்." இங்கு மிக தெளிவாக நம்முடைய வாஞ்சை பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய சரீர வாழ்வில் இருந்து, பரம வாழ்வை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே ஆகும். ஆனால் வசனம் 5 கூறுகிறபடி அதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே, ஆவியென்னும் அச்சாரத்தை அதற்காகவே நமக்கு தந்திருக்கிறார். ஆனால் வசனம் 10 கூறுகிறபடி சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும். ஆம் நித்திய பரம வாழ்விற்கு நம்மை தகுதிப்படுத்துவது, சரீரத்தில் நாம் செய்யும் கிரியைகளை பொறுத்தே ஆகும். அதுவே கிறிஸ்துவின் நியாயசனத்தில் நம்மை நியாயம் தீர்க்கும்.

எனவே, நம் ஆவிக்குரிய வாழ்வை சீர்படுத்தி, தேவனுக்கு முன்பாக உத்தமமாக வாழ்வோமானால், தேவ ஆவியானவர் நம்முடைய ஆவி, ஆத்துமாவில் மாத்திரம் அல்ல, நம்முடைய மாம்ச சரீரத்தையும், தாம் தங்கும் ஆலயமாக மாற்றுகிறார். ஆம், நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் தேவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் பொழுது, அதன் பலனை நம்முடைய சரீரமும் பெற்றுக் கொள்கிறது. உண்மையில் நம்முடைய சரீரத்தில் செய்கைகளே, கிறிஸ்துவானவர் நமக்குள் இருக்கிறார் என்பதை

மற்றவர்களுக்கு வெளிப்படுத்தி காண்பிக்கிறது. ஆம், ஆண்டவர் நம்முடைய ஆவியோடு மாத்திரமல்ல, நம்முடைய சரீரத்தின் மூலமாகவும், நம்முடனும் பிறரிடமும் இடைப்பட விரும்புகிறார். ஆம், நம் ஆவியில் ஆத்துமாவில் கபடமில்லாமல் இருப்பது நமக்கும் தேவனுக்கு மட்டுமே தெரியும். ஆனால் தேவன் தந்த, அவருடைய உடமையாகிய சரீரத்தின் மூலமாக அப்பண்புகள் வெளிப்படும் பொழுதுதான், நம்மில் இருக்கும் ஆவிக்குரிய கனிகள், வரங்கள் பிறருக்கு பிரயோஜனம் உள்ளவைகளாய் மாறும். ஆம், எத்தனையோ தேவ பிள்ளைகளின் வாழ்க்கை முடிந்து, அவர்களுடைய சரீரம் மண்ணோடு மண்ணாக போய்விட்டது. ஆனால், அவர்கள் உயிரோடு இருந்த பொழுது, சரீரத்தின் மூலமாக அவர்கள் ஆண்டவருக்காக ஓடிய ஓட்டங்கள், செய்த ஊழியங்கள், கட்டி எழுப்பிய சபைகள், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், இன்று அநேகருடைய ஆவிக்குரிய மற்றும் சரீரத்திற்குரிய வாழ்க்கைக்கு பிரயோஜனமாய் உள்ளது. ஆம் நம்முடைய ஆவிக்குரிய எந்த பண்பும் அது விசுவாசமானாலும், அன்பானாலும், பரிசுத்தமானாலும் அல்லது ஆவிக்குரிய எந்த வரமும், அது தீர்க்கதரிசன வரமானாலும், அந்நிய பாஷை வரமானாலும், அது நம்முடைய சரீரத்தின் மூலமாக வெளிப்படும் பொழுதே அது மற்றவர்களுக்கு பிரயோஜனமாய் இருக்கும். எனவே நம்முடைய சரீரத்தை பேணி பரிசுத்தமாய் காப்பது மிக முக்கியமானதாகும்.

சிலர் போதிக்கிறபடி, நம்முடைய சரீரம் அழிந்து போகக்கூடியது, எனவே அதற்கு எந்த முக்கியத்துவமும் அல்லது மகிழ்ச்சியையோ தரத் தேவையில்லை என்று கூறுவது வேதத்திற்கு முரணாகும். மேலும் ஆவிக்குரிய வாழ்வில் தேவன் அளிக்கும், சுகம், பெலன், மேன்மை யாவையும் நம்முடைய சரீரமும் பெற்று அனுபவிக்கிறது. மேலும் தேவன் தரும் ஆவிக்குரிய ஆசிர்வாதங்களை மற்றவர்களுக்கு கடத்தும் வாய்க்காலாய் நம்முடைய சரீரம் செயல்படுகிறது. ஆவிக்குரிய வாழ்வில் நமக்கு எதுவெல்லாம் சந்தோஷத்தை, சமாதானத்தை தருகிறதோ, அதுவெல்லாம் நம்முடைய சரீரத்திற்கும் சந்தோஷத்தை சமாதானத்தை தரும். அதை போல் ஆவிக்குரிய ரீதியாக எதுவெல்லாம் நமக்கு துக்கத்தை தருகிறதோ, தேவனை விட்டு பிரிக்கிறதோ, அதுவெல்லாம் சரீரத்திற்கும் அப்படியே ஆகும். இது வேறுபடும் பொழுதே, ஆவிக்குரிய வாழ்விலோ

அல்லது சரீர வாழ்விலோ, நாம் பாதை மாறி தவறி போகிறோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

சிலர் கேட்கலாம், அப்போஸ்தலர்கள் முதல் இன்று வரை சரீர பிரகாரமாக எத்தனையோ பேர் உபத்திரவத்தை அனுபவித்துள்ளனர். இது எப்படி ஆவிக்குரிய வாழ்விற்கு சந்தோஷம் ஆகும் என்று. ஆனால் **அப் 5:40-42 வசனங்கள் கூறுகிறது "அப்பொழுது அவர்கள் அவனுடைய யோசனைக்கு உடன்பட்டு, அப்போஸ்தலரை வரவழைத்து, அடித்து, இயேசுவின் நாமத்தைக்குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள். அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்."**. ஆம், இங்கு சரீர பிரகாரமாக அவர்கள் அவமானம் அடைந்தார்கள். ஆனால் ஆவிக்குரிய விதத்தில், தாங்கள் கிறிஸ்துவின் நாமத்திற்காக அவமானம் அடைந்ததற்காக, அதை அவர்கள் சந்தோஷமாக ஏற்றுக்கொண்ட காரணத்தினால், சரீரமும் அதை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு, பயந்து போய் உட்கார்ந்து விடாமல் மறுபடியும் அவர்களை செயல்பட வைத்தது. மேலும் **அப் 21:13 இல், "அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்துபோகப்பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்குமாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்."**. ஆம் சரீர உபத்திரவத்தையோ, ஏன் மரணத்தையோகூட கண்டு, சரீரத்தில் பவுல் கவலைப்படவில்லை. காரணம் அவருடைய ஆவிக்கு எது தேவையானதாக கண்டதோ, அதுவே சரீரத்திற்கும் தேவையானதாக இருந்தது. அதற்கேற்ற விதமாக அவருடைய ஆவியும், சரீரமும் ஒன்றாய் செயல்பட்டன. இதனால் தான் அப்போஸ்தலனாகிய பவுல், **கலா 6:17 வசனத்தில் "கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்."** என்று தைரியமாக கூற முடிந்தது. மேலும் **கலா 2:20 இல் "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில்**

**பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.**", ஆம் அப்.பவுல் கூறுவதைப் போல, நாம் நம்முடைய ஆவிக்குரிய வாழ்வையும் சரீர வாழ்வையும் பிரித்து பார்க்கக் கூடாது. எனவே அழிந்து போகும் இவ்வுலகத்தில், அழிந்து போகக்கூடிய சரீரத்தோடு நாம் வாழ்ந்தாலும், அந்த சரீர வாழ்க்கையும், ஆவிக்குரிய வாழ்வினால் கட்டப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு இருக்குமானால், நாம் ஏனோக்கை போல, மாம்ச பிரகாரமாக இவ்வுலகில் வாழும் பொழுதே, தேவனோடு சஞ்சரிக்கும் மேன்மையான ஆவிக்குரிய அனுபவத்தை பெற முடியும். ஆண்டவர் அப்படிப்பட்ட மக்களையே எதிர்பார்க்கிறார். அதற்காகவே தம்முடைய ஆவியானவரை, நம் ஒவ்வொருவருக்கும் தந்திருக்கிறார்.

ஒருவேளை கர்த்தருடைய வருகைக்கு முன், நம்முடைய சரீரம் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மண்ணோடு மண்ணாய் போனாலும், **1 கொரி 15:42-44 வசனங்கள் கூறுகிறபடி "மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு.**". ஆம், நம்முடைய ஜென்ம சரீரம் அழிந்தாலும், அதற்குரிய பலன் ஆவிக்குரிய சரீரத்தின் மூலமாய் நமக்கு கொடுக்கப்படும். **மேலும் 1 கொரி 15:45-49 வசனங்களில் "அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்மசரீரமே முந்தினது; ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர். மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே; வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே. மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்.**". ஆம், ஆவிக்குரிய சரீரத்தின் மூலமாய் வானவருடைய சாயலை அணிந்து கொள்ளவோம்.

ஆம், மண்ணான நம்முடைய பெற்றோரின் சாயல் (பாவ சுபாவம்) நீங்கி, வானவராகிய கிறிஸ்து இயேசுவின் சாயல் நம்மில் வெளிப்படும். எனவே நம்முடைய ஆவி, ஆத்துமா, மற்றும் சரீரம் ஆகிய மூன்றையும் தேவனுக்கு முன்பாக பரிசுத்தமாய் பாதுகாத்து, அவரோடு கூட நித்திய ஜீவகரையில் சேர்வோமாக. ஆமென், அல்லேலூயா.